DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.154/21

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name சரண்குமார் | Father’s Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தேனியில் குடியிருக்கிறேன். மீன்கடை வைத்துள்ளேன். எதிரியை தெரியும். கடந்த 14.7.21 ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் எங்களுடைய கடையில் நான் , என் மனைவி ஆகியோர் சேர்ந்து மீன்வியாபாரம் செய்துக்கொண்டிருந்தோம். அப்போது மீன்களை வறுத்துக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த எதிரியிடம் எங்களிடம் வாங்கிய ரூ10000 அட்வான்ஸ் திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். அதற்கு எங்களுடன் சண்டை போட்டு தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி கடையில் இருந்த எண்ணை சட்டியை கிழே தள்ளிவிட்டார். அது என் மீதும் என் மனைவி மற்றும் என் பிள்ளைகள் சைலேஜ்குமார் மற்றும் தீர்த்தா ஆகியோர் மீது பட்டு காயம்ஏற்பட்டது. மேலும் என்னை கிழே தள்ளிவிட்டு அடித்தார். இனிமேல் என்னிடம் பணம் கேட்டால் கொன்றுவிடுவேன் என சத்தம் போட்டார். அதன்பிறகு நான் ஆட்டோவில் ஏறி க.விலக்கு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். மருத்துவமனையில் இருக்கும் போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என் மனைவி புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து போட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார்வாக்குமூலம் அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி தெரிவித்தார்.